27th September 1958]

SRI K. RAMACHANDRAN : ரோடு அபிவிருத்தி இல்லாது பின்தங்கிய பிரதேசங்களுக்கு இதை விட ஏதாவது ஒரு பகுதி ஒதுக்கப் பட்டிருக்கிறதா ? அப்படியானுல் இந்த ஆண்டில் எவ்வளவு ஒதுக்கப் பட்டிருக்கிறது ?

THE HON. SRI P. KAKKAN : இதைப்பற்றி தனியாக கேள்வி போட்டால் முழு விவரம் கொடுக்கிறேன்.

SRI K. B. S. MANI : ரோடுகள் பராமரிப்புக்கு என்று மத்திய சர்க்காரிடமிருந்து தொகை ஒதுக்கப்படுகிறபோது மொத்தத் தொகையில் ஒவ்வொரு ஜில்லாவிற்கும் இவ்வளவு என்று ஒதுக்கப்படுகிறதா ? குறிப்பிட்ட இடங்களில் இந்த ஆண்டில் தஞ்சை ஜில்லாவுக்கு எவ்வளவு ஒதுக் கப்பட்டிருக்கிறது ? தஞ்சை ஜில்லாவில் குறிப்பிட்ட ஒரு தாலூகாவுக்கு மட்டும் அப்படி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதைத் தவிர வேறு தாலுக்காக் களுக்கும் ஒதுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினர் கேட்கும் கேள்வி இந்தக் கேள்வியிலிருந்து எழவில்லை. ஆகையால் தனியாக கேள்வி கேட்கவேண்டும்.

SRI N. MAHALINGAM : சமீபத்தில் எண்ணெயின் விலை குறைந்ததன் காரணமாக அதிலிருந்து வரக்கூடிய லாபத்தை எடுத்து எக்ஸ்பிரஸ் ஹைவேஸுக்கு வசதி செய்து கொடுக்க சில இடங்களில் கொடுத்து வருகிறார்கள். அதைப் போலவே மத்திய சர்க்கார் நம்முடைய மாகாண சர்க்காருக்கு அப்படிப்பட்ட தொகை ஏதாவது கொடுத்திருக்கி றார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : இதற்கும் தனியாக கேள்வி போடவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

SRI A. V. P. ASAITHAMBI : ஸ்டேட் ரோடு போடுவதற்காக சென்ற ஆண்டு பல லட்சக்கணக்கான ரூபாய் மத்திய சர்க்கார் நமக்கு அனுமதித்திருந்தும் அதில் ஒரு பைசாக்கூட வாங்கி செலவழிக்காமல் அது காலாவதியாகக்கூடிய அளவுக்குப் போய்விட்டது, அந்த அளவில் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படவில்லை, ஏன் ?

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினர், மத்திய சர்க்கார் ஒன்றுமே கொடுக்கவில்லை என்று சொல்லக்கூடியவர் இப்பொழுது அதிகமாகக் கொடுத்திருக்கிறார்கள் என்று ஒப்புக்கொள்வதைப் பார்த்து நான் பாராட்டுகிறேன். (சிரிப்பு). இருந்தாலும் அவர்கள் கொடுத்த தொகையில் எவ்வளவு தூரம் செலவு செய்ய முடியுமோ அவ்வளவு தூரம் செலவு செய்துகொண்டுதான் வருகிறோம்.

SRI R. SWAMINATHA MERKONDAR : தற்போது கன்ட்ரிப்யூஷன் கொடுக்க முடியாத நிலையில் சில பிற்போக்கான நிலைமை யிலுள்ள கிராமங்கள் இருக்கின்றன. அவைகளுக்கு சர்க்கார் நிதியிலி ருந்து ஏதாவது கொடுத்து ரோடுகள் போட்டு வசதி செய்து கொடுப் பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : சில இடங்களில் திட்டம்போட்டு வசதி செய்து கொடுக்கப்பட்டு வருகிறது. கனம் அங்கத்தினர் ஏதாவது குறிப்பிட்டுச் சொன்னுல் அதைப்பற்றி கவனிக்கப்படும்.

Causeway across Cooum river

* 573 Q.—SRI K. VINAYAKAM : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether any representation was presented to the Hon. the Chief Minister by the villagers for the formation of a road from

Velappan Chavadi to Thiruverkadu via Perumal Agaram by laying a causeway across the Cooum river in the Saidapet taluk, Chingleput district;

(*b*) if so, the action taken thereon; and

(*c*) the estimated cost therefor?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: (*a*), (*b*) & (*c*) The Government received a petition on the subject from Sri Devi Karumariamman Devasthanam of Thiruverkadu in Chingleput district and the work has been included in the Village Road Programme of the Chingleput District Board. The estimated cost of the work is Rs. 75,000.

SRI K. VINAYAKAM: In view of the fact that this road falls in a region where there is no Community Development Project nor even the National Extension Service Schemes, will the Government think of the possibility of constructing the entire road along with the causeway in view of the backwardness of the area without expecting any contribution from the people or the trustees of the devasthanam?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: The Government have given due consideration to this matter and as there was no likelihood of taking up the scheme under the other programmes, it is included under the Village Road Programme.

Prohibition offences

* 574 *Q*.—SRI T. SAMPATH (on behalf of Sri R. Srinivasa Iyer): Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) how many prosecutions were launched under the Madras Prohibition Act in each district in 1957;

(*b*) how many ended in (i) conviction, and (ii) acquittal;

(*c*) the number of cases that ended in acquittal as a result of analysis of the illicit liquor seized and sent for chemical examinations;

(*d*) in how many cases sentence of imprisonment was awarded; and

(*e*) the total amount of fines (districtwar) levied and collected?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) to (*e*) Sir, a statement [a] giving districtwise particulars is placed on the table of the House.

SRI T. SAMPATH: இப்பொழுது மேஜையின் மீது வைக்கப் பட்டிருக்கிற பட்டியலைப் பார்த்தால் சேலம், கோயம்பத்தூர், வட ஆற்காடு, செங்கற்பட்டு, இந்த ஜில்லாக்களில் கேஸ்கள் அதிகமாக குறிப்பிடப்பட் டிருக்கிறது. இந்த கேசுகள் அந்த ஜில்லாக்களில் அதிகமாக இருப்ப தற்குக் காரணம் என்ன என்று சொல்லுவாரா கனம் மந்திரி அவர்கள்.

[a] Printed as Appendix IV on page 880 infra.